
# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை 16

(உறுப்பினர்களுக்கு மட்டும்) இ.ம இ பதிவு எண் : 135/83



அருளாட்சித்தலைவி
தேவி வீரமாகாளியம்மன்

அருளாட்சி நாயகம்
ஞாலகுரு சித்தர் கருவூரார்

தமிழினச் செழுச்சியே இந்து மத மறுமலர்ச்சி!
பொருளுலக இருளகற்ற அருளாட்சி அமைப்போம்!

காணிக்கை ரூ 1

வெளியீடு—: 26-

# பகுத்தறிவின் பேச்சுக்களில்..............!

அண்மையில் 11—3—85 நடைபெற்ற சென்னைத் திருமணத்திலும், 23—3—85 அன்று பொன்னேரியிலும் தி. க தலைவர் கி. வீரமணி மற்றும் பேராசிரியர் ம. நன்னன் ஆற்றிய உரையிலிருந்து சிலவற்றைத் தருகின்றோம் உங்களின் சிந்தனைக்கு தருவதின் மூலம் 'பகுத்தறிவு என்றால் என்னவென்று ஆராய வேண்டுகின்றோம். நாம் திராவிடக் கழக நண்பர்களை எதிர்க்கவில்லை நம்மோடு இணைத்துச் செயல்படவே விழைகின்றோம்.

1. இங்கே நடைபெறுகின்ற திருமணத்தில் குத்துவிளக்கு ஏற்றவில்லை. நல்ல ஒளி வெள்ளத்தில் திருமணம் நடைபெறுகின்றது இதே பழையகால திருமணம் என்றால் நாம் இங்கே உட்கார முடியாது ஒரே புகை இன்று மின்விசிறி கீழே அமர்ந்துள்ளோம் இது தான் வித்தியாசம் இது தான் புரட்சி அந்தக்காலத்தில் தமிழன் இருட்டில் (அ) இரவில் திருமணம் செய்திருப்பான் எனவே கல்யாணத்தில் விளக்கேற்றினான் இன்றைக்கு என்ன தேவையிருக்கின்றது ?

[குத்துவிளக்கு ஏற்றவில்லை என்றால் பகுத்தறிவு புரட்சி ! மின்சாரம் இல்லாத நேரத்தில் எண்ணை விளக்கு ஏற்றினால் மூடநம்பிக்கை வளர்ப்பதற்கு ஒப்பாகுமா ? ]

பேராசிரியர் மா. நன்னன்

2. இங்கே யாகத்தில் எண்ணை ஊற்றினால் நேரே கடவுளுக்கு போய்ச் சேருமாம் எப்படிப் போய்ச்சேரும் ? கடவுளுக்கு கை இல்லையா ? எங்கும் உள்ள கடவுள் எடுத்துக்கொள்ளக் கூடாதா? கடவுளின் பெயரால் ஏமாற்று! கடவுளின் பெயரால் உணவுப்பொருட்கள் வீண் !
[அதே திருமணத்தில் இவருக்கு வைத்த உணவில் மீதி பாதி வைத்தார். அது வீண் இல்லையா? ]

3. தெருவில் போகின்றோம் சாணம் காலில் படுகின்றது உடனே அசுத்தமாகிவிட்டது என்று கூறி காலைக் கழுவுகின்றோம் திரும்பி சற்று தூரம் போனவுடன் மரத்தடியிலே சாணியாலே பிள்ளையார் வைச்சிருக்கு உடனே விழுந்து விழுந்து கும்பிடுறான் அங்கே காலில் பட்டவுடனே காலை கழுவினான். அப்போ புத்தியிருந்தது இங்கே 'பத்தி வந்திச்சு' அவனுக்கிருந்த புத்தி போச்சு பத்தி எங்கு வருதோ அங்கு புத்தி போகும்.

[கல்லா இருந்தப்போ புத்தி இருந்தது அதுவே பெரியார் சிலையாவோ, சமாதியாவோ மாறிய பிறகு மாலை போடுகிறோம் விழா எடுக்கிறோம் விளக்கைப் போடுகிறோம்..............! ]

4. நீங்க ஒன்றைப் பார்த்தீர்கள் என்றால் தெரியும் ஆரியரின் வருகைக்கு முன்பே திராவிடர் -கள் சிந்து சமவெளி நாகரீகத்தில் மிக உயர்வாக வாழ்ந்து வந்தனர் அவர்கள்தான் நமது முதாதையர்கள் அவர்களின் பண்பாடு தான் நமது பண்பாடு. ஆரியர்கள்கோலும் குடுவையுமாக வந்து நமது பண்பாட்டை அழித்தனர்.

[அப்படியென்றால் அந்தத் தமிழர்கள் சிவலிங்கத்தை வணங்கியதாக வரலாற்று வல்லுனர்கள் கூறுகின்றனரே! ஏற்றுக் கொள்வீர்களா? ]

5. பெரியாருக்கும் சங்கராச்சாரியாருக்கும் என்ன வித்தியாசம்? என்றால் பெரியார் தமக்குத் தெரிந்த உண்மையை கடவுள் இல்லை என்பதை உலகந் தெரிந்துகொள்ளட்டும் என்று கூறினார் சங்கராச்சாரியாருக்கும் தெரியும் கடவுள் இல்லை என்ற உண்மை தனக்குத்தெரிந்த உண்மையை வெளியே சொல்லாமல் மக்களை ஏமாற்றி வருகின்றார்..................

(இதுதான் வித்தியாசமா ! ..............)

ஒலிப்பதிவு வழங்குதல்
இ. ம. இ செயற்குழு

## சிவ காயந்திரி மந்திரம்

தத்துவப் பிறப்பாய வித்தே மகேசா
மகா தேவேந் தீயே யாகி
தன்னோடு உருத்திரப் பிறப்பைச் சாதித்தாய்
என்னோடு உன்னோடன்றி எங்கும் அருளேற
ஓம் நமச்சிவாய சிவாயநம ஒலியருளினைய்
தழைத் தெழுநீ நாங்கள் பிழைத்தெழ அருளுநீ
அழைக்கிறேம்! செழுந்தியே செழித்தெழுநீ
வாசிவாசி! வாசிவாசி! வாசிவாசி!
வசிவசி! வசிவசி! வசிவசி!

ஓம் காயந்திரிந்து சிவமாகட்டும்!
ஓம் ஆவி ஆன்மா ஆருயிர் ஒன்றாகட்டும்!
தத்துவமே நமச்சிவாய மென்றுணர்ந்தோம்
சித்தாந்தமே சிவாய நமவென்றுணர்ந்தோம்
நங் மங் சிங் வாங் யங்!
காத்தருளுக! காத்தருளுக! காத்தருளுக!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!

## சிவ காயந்திரி மந்திரம்

[சத்தி-காயந்திரி மந்தரம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது]

சிவலிங்க 1 உருவைவைத்தோ 2 ஐங்கோணச் சக்கரம் வைத்தோ, 3 குரு வடிவு ஓவியம் வைத்தோ, 4 புகை எழுப்பியோ, 5 ஒளிவிளக்கேற்றியோ, சிவ ஞான சிவனை வழிபடுங்கால் கூறி அருட்பயனைத் துய்க்க உதவும் சிவ காயந்திரி மந்திரம். இதனைக் கூறும்போது ஏதாவது படையல் படைக்கப்படல் வேண்டும்.

—குருபாரம்பரியச் செய்தி

அணமை காலத்தில் சிவகாயந்திரி மந்திரத்தைப் பற்றி பலவிதமானக் கருத்துகளும் அறைகுறையாக ஓதப்பட்டும் வருகின்றன. அதனால் ஏற்படும் தீமையையுணர்ந்து ஞாலகுரு சித்தர் கருவூரார் பொறுமையிழந்து இதனை உலகுக்கு வழங்குகின்றார். இம் மந்திரம் சாதாரண மானுட வாழ்வுக்குத் தேவையற்றது; இருப்பினும் பிறமண்ணினரால் அறைகுறையாக வெளியிடப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இனியாவது உணர்ந்து திருந்தட்டும் பிறமண்ணினர்.

# அன்புள்ள சேவுகனுக்கு

பரமாச்சாரியாரீரே! அன்பு சேவுக!

சில ஆயிரம் பேர் ஒருங்குகூடி ஒற்றுமையுடன் திட்டமிட்டபடி மிகப் பெரிய திருவிழா நிகழ்த்தியிருக்கிறோம். ஆனால் இத்திருநாட்டுப் பதிப்பகங்களோ, செய்தி யேடுகளோ, சமயசமுதாய அரசியல் கலை இலக்கியக் கழகங்களோ, தனிமனிதர் களோ...... நம் பக்கம் திரும்பவில்லை: நம்மை விமர்சிக்கவில்லை.

நாமும் பல நூறுயிரக்கணக்கான அறிக்கைகளையும்: விரல்விட்டு எண்ணி -டக் கூடிய அளவு பத்துப் பன்னிரண்டு நூல்களையும்: ஏட்டையும் நாட்டையும் கதி கலங்கச் செய்யும் கருத்துக்களைத் தாங்கி வரும் மாத இதழ் 'குருதேவர்' அறிக்கை -யை இரண்டாண்டு காலமாக வெளியிட்டும். நமது முழுநேர ஊழியர்களும் பகுதி நேர ஊழியர்களும் நாடெங்கும் கருத்துரையாடல், விவாதம், சொற்பொழிவு, அரு ளுரை அருள் வழங்கல்,........என்று நேரடியான கருத்துப் புரட்சியில் ஈடுபட்டும் ........செயல்படுகிறோம்.-பிறகு, ஏன் நமக்கு எதிர்பார்க்கும் வரவேற்பில்லை?

நண்ப! யார்யாரோ திடீரென்று அருளாளர்களாக வெளிப்படுகிறார்கள்; பொருளுலகச் செல்வாக்கும், விளம்பரமும் பெற்றிடுகிறார்கள். நமக்கு அவர்கள் மீது பொறுமையில்லை. அவர்கள், அருட்புதையல் எடுத்தவர்களாகத் தன்னல வாழ்வு, குறுகிய வட்டாரச் செயல், மொழியின் நாட்டுணர்வற்றபோக்கு, எல்லா மதவாதிகளையும் போல் பசனைக் கூட்டமாகச் செயல்படல்........... என்று செக்கு மாடுபோல், சுற்றிச்சுற்றி வருகிறார்கள். இவர்களைப் போன்ற அனைவருக்கும் உயி ராக, உள்ளீடாக, வாழ்வாக, தத்துவமாக, வேலியாக........... இருப்பவர்களே நாம். கடவுள்களையும், வழிபாட்டு நிலையங்களையும், மனிதவாழ்வின் முன்பின் மறைகளையும், அண்டபேரண்டங்களையும் விளக்கிடும் அறிவும், ஆற்றலும், ஆண் மையும் உள்ளவர்களே நாம். எனவே, உலக ஆன்மநேய ஒருமைப்பாடு, இந்துமறு மலர்ச்சி, மதவிழிச்சி, ஆவி ஆன்மா உயிர் ஒன்றுபடல் .........என்று செயல்படும் நாமே சமயத்துறையின் வழி, வழிகாட்டி, வழித்துணை, வழிப்பயன், வழிக்காவல்... ......என்பதை உணர்ந்து அமைதியோடு செயல்படுவோமாக.

எத்தனையோ சிறிய பெரியசமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியக் கழ -கங்கள், கட்சிகள், இயக்கங்கள், சபைகள், குழுக்கள் .........இன்றைய உலகிய -லில் அந்தந்த வட்டாரங்களில் ஏற்படக்கூடிய ஒரு சில சிக்கல்களை எதிர்த்துப் போராடிச் சிறுசிறு வெற்றிகளையும் பெற்றிடுகின்றார்கள், -இவைபோல், நாம் ஏன் நேரடிப் போராட்டங்களில் ஈடுபடவில்லை' என்ற ஆதங்கமும், ஏக்கமும், குற்றச் சாட்டும் எழுந்துள்ளன. இது தவறு. ஏனெனில், மேற்படி அமைப்புக்கள் 'தற்கா லிகமான தீர்வுகளையே[Temporary reliefs] உண்டாக்குகிறார்கள். நாம், அப்படி யல்ல, குறைகளுக்கும், கறைகளுக்கும் காரணமாக இருக்கக்கூடிய அனைத்துத் தீய வைகளையும் முழுமையாக அகற்றிடும் மாபெரும் பணியிலேயே ஈடுபட்டுள்ளோம். நம்மால், தனிமனிதர்களும், குடும்பங்களும், சமுதாயமும், .........முழுமையான செம்மைநிலையைப் பெற்றுவிடும், அதன்பிறகு இன்று நிகழும் போராட்டங்களுக் -கோ, போராடும் அமைப்புக்களுக்கோ அவசியமே இருக்காது.

நம்மவர்கள், 'குருதேவர்' அறிக்கைகளை விற்பதிலும்; பொது இடங்களிலும் வழிபாடுகளிலும் நமது குருதேவர் அறிக்கைகளைப் படித்துக்காட்டுவதிலும் தாம் நமது வளர்ச்சியிருக்கிறது நம்மவர்கள், இதுவரை வெளிவந்துள்ள அறிக்கைகளையும் அறிவிக்கைகளையும், புத்தகங்களையும் திருப்பித் திருப்பி ஊன்றிப்படித்து கொள்கை விளக்கம் வளமாகவும் வலிவாகவும் பெற்றுக்கொண்டேயாக வேண்டும். இதுவே உடனடிச் செயல்திட்டமாக அமையட்டும்.

விரைவில், நேரடிப் பயிற்சியால் ஒரு சில முழுநேர ஊழியர்களை உருவாக்கியே -யாக வேண்டும் புக்குவமுடையவர்களுக்கு அருளாற்றலும் அருட்கலைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டேயாக வேண்டும் இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தால் உடனே சுற்றுப் பயணம் வரத்தயாராகவுள்ளோம்யாம்,

எம் காலத்துள் அருளாட்சி அமைய வேண்டும்.

அன்பு- ஞாலகுருசித்தர் கருவூரர்
இந்துமதத் தந்தை

---

## கேள்வியும் நானே...... ! பதிலும் நானே........!

**கொற்றவை, சுடலை பத்திரகாளி, கபாலீசுவரி........ என்ற வழிபடு நிலையினர்கள் யாவர்?**

சுடலை பத்திரகாளி; காடுகிழாள், சுடுகாட்டு எலும்பு மாலைகளை அணிந்தவள், கையில் கொலை அரிவாளிருக்கும்.

கொற்றவை ; குருதிச் சொட்டச் சொட்ட மனிதத்தலைகளை முடிந்து மாலையாக அணிந்தவள் கையில் கொலைவாளிருக்கும்.

கபாலீசுவரி ; கையில் மனிதமண்டை ஒடு வைத்திருப்பவள் திரிசூலம்இருக்கும்

இது வன்றி ஆலி, க்பாலி, கூலி, சூலி, நீலி, எனும் ஆறு பெண் தெய்வங்களும் வேருனவையே! மற்றவை குருவழிகாண்க!

2. சிறு தெய்வங்கள், பெருதெய்வங்கள் விளக்கந் தேவை!

மிக விவரமாக வரலாற்றுப் பின்னணியோடு தரவேண்டிய பதிலாகும் இருந்தாலும் சுருக்கமாக தரவிழைகின்றேம், பின்னர் தனிக்கட்டுரையே வெளிவரும் பதினெண் சித்தர்களுக்கு அனைத்து தெய்வங்களும் சமமானவையே ஆனல் வழிபாட்டு முறையை மட்டும் பிரித்து வைத்திருந்தனர்.

தமிழர்கள் காவல் தெய்வங்கள், குலதெய்வங்கள், வீட்டுத் தெய்வங்கள், மூலத் தெய்வங்கள் என்று பிரித்து பிரித்து வைத்து நாடோறும், வாரந்தோறும், மாதமிரு முறை.........என்ற முறையில் வழிபாட்டு முறைகளை நடத்தி வந்தனர் இதனை திட்ட மிட்டு வடஆரிய வேத நெறியினர் சிறு தெய்வங்கள், துட்ட (ஷ்ட) தெய்வங்கள் .........என்றெல்லாம் கூறி வழக்கமான நமது அன்றுட வழிபாட்டிலிருந்து இவை -களைப் பிரித்தனர் இதனல் காவல், குலதெய்வங்களின் பாதுகாப்போ, அரணே இன்றி தமிழுலகம் தனிமைப் படுத்தப்பட்டு சிதறுண்டு ஒற்றுமையின்றி இந்துமத தத்துவ உண்மைகளை மறந்தொழிந்தது இன்று தமிழினம் அடிமை பட்டுப் போக ஏதுவாகியது,

---

தொடர்பு முகவரி ; சி. கவிக்குமார் B.Sc., தலைமைப்பொறுப்பாளர்,
56, N.G.O. காலனி பொன்னேரி-601204.

# இலக்கியப் பாரம்பரியம்

● இலக்கிய மென்பது முன்னோர்களை வழிபட்டுப்பத்தி செலுத்திடவும்; முதியவர் -களை மதித்து வணங்கிப் பணிந்து வாழும் பண்பை விளைவிப்பதாக இருக்க வேண்டும்.

● இலக்கிய மென்பது இன விரோதிகளையும் துரோகிகளையும் காலப் போக்கில் ஒருமுகமாகச் சந்தித்துப் போரிட்டு வெற்றி பெறக் கூட சமுதாய ஒற்றுமையை வளப்படுத்தி வலிமைப் படுத்துவதாக இருக்க வேண்டும்

● இலக்கிய மென்பது முற்பிறவி நினைவுகளையும் மறுபிறவி எண்ணங்களையும், இப்பிறவியின் உணர்வுகளையும் வற்ருது ஊற்றெடுக்கச் செய்வதாக இருக்க வேண்டும்.

இலக்கிய மென்பது ஆவி, ஆன்மா, உயிர் ஆகிய மூன்றையும் விளக்கிக் கொள்ளும் தத்துவ ஞானத்தை எளிமையாக மனிதருக்குள் முளை விட்டு வளரச் செய்வதாகும்.

● இலக்கிய மென்பது சிந்தை வீரத்தையும், நெஞ்ச உரத்தையும், உணர்வுத் தரத்தையும், செயல் தீரத்தையும் வளர்ப்பதாக இருக்க வேண்டும்

● இலக்கிய மென்பது அன்னிய மொழிகளின் ஊடுருவலையும் பிற இனங்களின் சூழ்ச்சிகளையும் முறியடிப்பதாக இருக்க வேண்டும்

● இலக்கிய மென்பது பொருளுலகுக்கும் அருளுலகுக்கும் ஒளி வழங்குவதாக இருக்க வேண்டும்.

● இலக்கியத்தில் நலிவும், மெலிவும், கலப்படமும், சிதைவும் சீரழிவும், இழிவு -ணர்வும், பழியுணர்வும், போலியுணர்வும், கூலியுணர்வும், காலியுணர்வும், அடிமை -யுணர்வும், கோழையுணர்வும் தேவையில்லாத அடக்க உணர்வும், தெளிவின்மையும் ........ தலைவிரித்தாடுவது தான் அந்த மொழியும் இனமும் நாடும் அன்னியரின் சூழ்ச்சிகளால் வீழ்ச்சியையும் தாழ்ச்சியையும் பெற்றுத் தொடர்ந்து நுட்பமான திட்டங்களால் விழ்ச்சி நிலை ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்றுணர -லாம்.

● இலக்கியத்தில், மொழித் தூய்மையும், வாய்மையும், தனித்தன்மையும் இருந் திடல் வேண்டும். அது தான் இன விழிச்சியையும் செழிச்சியையும் வளர்ச்சி நிலையிலேயே காத்திட உதவும்.

● இலக்கியத்தில், சித்திரிக்கப்படும் வரலாறும் வாழ்வியலும், தத்துவமும் உரிமையுணர்வும் தன்னம்பிக்கையும், இனமானமும், இன ஒற்றுமையும், *நாட்டுப் பற்றும் தான் பிஞ்சு நெஞ்சங்களிலேயே முளைவிட்டுக் கிளைத்துச் செழித்து வளர்ந்திடும்.

● அடிமைப் பட்டுக்கிடக்கும் தமிழர்களை, சாதி, மதம், மொழி, சிற்றரசாட்சி முறை.........முதலியவைகளால் ஒற்றுமையற்றும் மொழிப் பற்ருே, இனப்பற்ருே, நாட்டுப்பற்ருே ........இன்றியும் உள்ள தமிழர்களைப் பழம் பெரும் இலக்கியங்களைச் சிறப்பும், செல்வாக்கும், மலர்ச்சியும், ஆட்சிமீட்சியும் பெறச் செய்வதன் மூலம் தான் திருத்திச் செம்மைப் படுத்தி உண்மையான தமிழர்களாக உணர்வாலும் எண்ணத் -தாலும் செயலாலும் வாழச் செய்திட முடியும்.

● தமிழ்நாடு தன்னுடைய உரிமைகளையும், பெருமைகளையும் இழந்து அன்னிய அரசர்களாலும், மன்னர்களாலும், தளபதிகளாலும் பங்கு போடப்பட்டு ஆளப்படும் நிலைவளர்ந்து விட்டது. இந்த இழி நிலை, பழி நிலை, அழி நிலை, ஒழி நிலை,........ முதலி -யவை யெல்லாம் மாற்றப்பட வேண்டுமானல் இலக்கியம் தான உரிய கருவியாக, ஆயுதமாக, சாதனமாகப் பெரிய அளவில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

# தன்வந்திரி தரும் பாரதக்காட்சிகள்

பாண்டவருக்கும் கௌரவருக்கும் போர் நிகழ்ந்தேயாக வேண்டுமென்ற விதியை யாருடைய மதியாலும் வெல்லவே முடியவில்லை. இது காறும் குருகுலத்தார் மறையாக, முறையாக, நெரியாக, வேதமாக, மரபாக, ஒழுகலாருக, சட்டதிட்டக் கட்டுப்பாடாக தங்களுக்கே உரிய சொத்துக்களாக காத்து வந்திட்ட அத்திரங்களுக்கும் வேலை வந்துவிட்டது. எனவே, நிகழப்போகிறபோர் குருகுல அத்திறப்போராகவே இருக்கும். இது குரு+அத்ரப்+போர் —> குருவத்திறப்போர் —> குருவேத்திறப்போர், குரு+அத்திற +சாத்திற+போர் = குருவத்திறச்சாத்திறப் போர் —> குருச்சேத்திறப்போர் ஆகும். (குருச்சாத்திற அத்திறப் போர் —> குருசேத்திறப்போர்

குருகுலம்+அத்திறத்திறமை +சோதிக்கும் போர் —> குருச்சேத்திரப்போர்

குருகுலத்தைச் சேர்ந்தவர்களின் திறமைகளை விளக்கும் போர் —> குரு+சேர்ந்தவர் +திறமை+போர்=குருச்சேத்திரப் போர், +என்று இப்படி வருங்காலம் நடக்கப்போகிற சந்திர குலத்தாரின் பேரழிவை விளைவிக்கும் போரை விளக்கும் சொற்கள் எண்ணற்றுப் பிறக்கும் ஆனல் போரின் அழிவுக்குரிய காரணங்களை ஆராய்ந்திடாத கண்ணற்ற பிறவிகளாகவே கலிகாலத்தவர் இருப்பர் இவர்களுக்காகவாவது நிகழ்ந்த போரை குருதி மழைக்கிடையே பார்வையைச் செலுத்தி குறிப்புகள் எழுதுகிறேன் சந்திரகுலத்துத் தன்வத்திரி.

துரியோதனன் தன்னால் முடிந்தவரை உலகம் முழுவதுமிருந்து படைகளை வரவழைத்துத்தன்னை வலிமைப் படுத்திக் கொண்டதோடு, தனது படைத் தலைமையை வீடுமர், துரோணாச்சாரியார், கன்னன்.........
முதலியவர்களிடம் ஒப்படைத்து துணிவோடு போர்க்களம் புகுந்தான். பாண்டவர்களோ, திரௌபதியின் அண்ணனை திட்டத்துய்மனை படைத்தலைவனுக்கி பாஞ்சால மன்னன் துருபதனையும், அர்ச்சுனன் மகன் அபிமன்யுவையும், விராட மன்னனையும் போர்கள நாயகர்களாகக் கொண்டு போரிட்டனர். இவர்களுக்கு உற்ற துணையாக கண்ணன் கையில் ஆயுதம் ஏதும் ஏந்தாமல் (அர்ச்சுனனுக்கு) தேராட்டியாக இருந்து பாரதப் போரரை நடத்த ஆரம்பித்தான்.

துரியோதனன் பக்கத்தில் முதல் பத்து நாட்களும் வீடுமர் (பீஷ்மர்) படைத்தளபதியாக இருந்து போர் நடத்தினர் அடுத்த ஐந்து பகல்களுக்கு துரோணாச்சாரியாரும், அதற்குமேல் இரண்டு நாட்களுக்கு கன்னனும் (கர்ணனும்); கடைசியாகச் சல்லியனும் படைத்தலைவர்களாக இருந்து பதினெட்டாம் நாள்போரோடு அனைவரும அழிந்தனர். குறிப்பாக பதினெட்டாம் நாள் பிற்பகலில் நடந்த கதாயுதப் போரில் (பீமன்) வீமன் தனது கதாயுதத்தால் போர்முறைகளுக்கு மாருக அநீதியான முறையில் துரியோதனனின் துடையில் அடித்துக் கொன்ருன் துரியோதனனுக்கு முன்னால் அவனது 99 சகோதர்களும் போரில் கொல்லப்பட்டு விட்டார்கள். எனவே துரியோதனனையும், அக்ரூரோனைகள் 1, அசுவத்மன் 2, கிருபர் 3, கிருதவர்மா என்ற மூவர்களேயாவர்

அசுவத்தாமன் தன் தந்தையின் கொடுமையான கொலைக்கு பழி வாங்குவதற்காக நள்ளிரவில் வாளோடு சென்று உறங்கிக் கொண்டிருந்த திட்டத்துய்மனையும், திரௌபதியின் பிள்ளைகளான ஐந்து இளம் பஞ்சபாண்டவர்களையும் கொன்றிட்டான் எனவே போரின் முடிவில் பஞ்சபாண்டவர்களின் பக்கம் பாண்டவர்கள் ஐவர், கண்ணன், சாத்தகி எனும் ஏழுபேர்களே மிஞ்சினுர்கள். இப்படிப்பாரதப் போரின் முடிவில் 10 பேர்களே மொத்தத்தில் (3+7) மிஞ்சினுர்கள் என்ற பெருமை முழுதும் மாயக்கண்ணனையே சேரும்.

10-ம் பக்கம் பாாககவும

# திருமூலர் தரும் குருவழிபாடு

'குரு' - என்ற சொல் தமிழ்ச் சொல்லே! குருத்து - முளை கருவின் வளர்ச்சி, ஆரம்பம்.

'குருவி' - பறவையினங்களில் ஆரம்பமானது, சிறியது முதலானது

குருகல் - ஒடுக்கமான, அடக்கமான, சிறிய. குருத்தோலை - வளர்ச்சியின் ஆரம்ப நிலையில் உள்ள இளமையான, வளமையான இலை.

குரு - அனைத்து விதமான வளர்ச்சிகளுக்கும் ஆரம்பமாக உள்ளவர்.

பதினெண் சித்தர்களின் அருட்கொடை அனைத்திலும் தெளிவாக 'குரு போற்றல்' 'குரு வணக்கம்' 'குரு வழிபாடு' 'குருவழி நிற்றல்' 'குருவணக்கம்'.........என்ற எண்ணற்ற கருத்துச் சொற்கள் காணப்படுகின்றன

'குருவில்லா வித்தை பாழ்' குரு தொட்டுக் காட்டாதவை சுட்டுப்போட்டாலும் வாரா.........என்ற மூதுரைகள் எண்ணற்குரியன இப்படி பதினெண் சித்தர்களால் வலியுறுத்தப்படும் குருவழிபாட்டை 'நவநாத சித்தர்களில்' ஒருவரான 'திருமூலர்' பரம்பொருளான சிவனைகூட வணங்க வேண்டாம் குருவை வணங்கி வழிபட்டு ஏற்றுப் போற்றி இரண்டறக்கலந்தால் மெய்ஞ்ஞான சித்தியெல்லாம் கைவரப் பெறலாமென்று பாடுகிறார்.

''சிவனை வழிபட்டார் எண்ணிலி தேவர்கள்
அவனை வழிபட்டங் காமா றுன்நில்லை
அவனை வழிபட்டங் காமாறு காட்டும்
குருவை வழிபடில் கூடலும் ஆமே''

—திருமூலர் திருமந்திரம்

இவரே. இன்னொரு பாடலில், 'எப்படி இரசவாதம் கற்றவன் மட்டமான உலோகங்களையும் உயர்ந்த பொன்னாக்கித் தருகின்றானோ! அப்படியே குருதேவர், எத்தகைய மனிதரையும், ஆணவம் *பிறப்பு (* கன்மம், சன்மம்) மாயை எனும் மும்மலங்களும் நீங்கப்பெற்ற 'பிறப்பிறப் பற்ற பெரியோனாக' மாற்றித் தருவார்..............என்று கருத்துப் பட பாடியுள்ளார்.

''பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தருபொன் வகையாக மாபோல்
குருபரி சித்த குவலயம் எல்லாம்
திரிமலம் தீர்ந்து சிவகதி யாமே''

— திருமூலர் திருமந்திரம்

இத்திருமூலர் தமது தலைவனான குருதேவரின் பெருமையை அல்லா, இறை, இயவுள், கடவுள், பரம்பொருள்............என்றெல்லாம் குறிப்பிட்டு உணர்த்துவதை விட அழகாக, விளக்கமாக, அடக்கமாக.........

''ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் அந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்பு கின்றேனே.........''

[அவையடக்கம்] —திருமூலர் திருமந்திரம்

இவர் மிகச்சிறந்த தமிழ்ப் பற்றுளர் பதினெண் சித்தர்களின் தாய்மொழி, இந்துமத மூல மொழி, அருளுலக ஆட்சி மொழி, அமுதமொழி............என்று தமிழை அடுக்கடுக்காகப் போற்றிக் கொண்டிராமல் தமது தமிழ்ப் பற்றை வெளிப்படுத்துகின்றார்.

''பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலீர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

—திருமூலர் திருமந்திரம்

எல்லாம் வல்ல இறைவன், தன்னைப் பற்றி அறியவும், தன்னை அடையவும், தன் அருளைப் பெறவும்,..... தமிழ் மொழியையே பூசை மொழியாக, மத மொழியாக, அருள் மொழியாகப் பயன்படுத்த வேண்டும், இவ்வுலகத்தார் என்ற பேருண்மையை விளக்கவே திருமூலர் படைக்கப் பட்டார் என்று விளக்கப்படுகிறது!

'தமிழே தெய்வ மொழி', 'தமிழே தேவமொழி', 'தமிழே கடவுள் மொழி', 'தமிழே இறைமொழி', 'தமிழே பத்தி மொழி', 'தமிழே சத்தி மொழி', 'தமிழே சித்தி மொழி', 'தமிழே முத்தி மொழி',......! என்ற பேருண்மை விளங்குகிறது இப்பாடலால்.

நவநாத சித்தரான திருமூலர்; "மனித வாழ்வு மிகமிக அற்பமானது என்பதை ஒவ்வொரு மனிதனும் எண்ணிப் பார்த்திட்டால்; ஆசை, ஆணவம், அகம்பாவம், வீம்பு, போட்டி, பொறாமை, பெருமை........ முதலியவைகளை யெல்லாம் விட்டொழித்து விட்ட மெய்யான குருவைச் சார்ந்தொழுகிப் பொய்யுலக மாயைகளை வென்றிடுவர்.' என்ற கருத்தை விளக்க மனித வாழ்வைச் சில பாடல்களில் வெகு நுட்பமாகச் சித்தரிக்கிறார்.

"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தனம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந் தொழிந்தாரே"
- திருமூலர் திருமந்திரம்

மனைவி நன்றாகச் சமைத்து வைக்க மூக்குப் பிடிக்க உண்ட கணவன், தனது காமப்பசி தீர அவளை அநுபவித்தான் - வாழ்வு கழிந்திட ஒருநாள் இடப்பக்கம் வலிக்கிறது என்றான், உடம்பைத் தரையில் கிடத்தி ஓய்வெடுக்கலாமென்றான். அவ்வளவுதான், அவன் மாண்டான், - படுத்தவன் எழவே இல்லை - செத்தொழிந்தான் - இவன், சத்தாகச் செய்தது ஏதாவது உண்டா? குருவைத் தேடிச் சேர்த்த அருட்சொத்து உண்டா?

"நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகை ஒன்று ஏறிக்கடை முறை
நாட்டார்கள் பின்செல முன்னே பறை கொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே"
- திருமூலர் திருமந்திரம்

நாட்டிலே பெரிய பதவியும், சிறந்த புகழையும் விரிந்த செல்வத்தையுமுடையவனே நம் ஊர்த் தலைவன் இவன் முத்துச் சிவிகை ஏறிப் புறப்பட்டால் இவனுக்கு முன்னே ஆடல் பாடல் கூட்டங்கள் போகும்; இவன் பின்னே ஊர்ப் பெரியவர்கள் எல்லாம் செல்வார்கள். ஆனால், இன்றிவன் இறந்ததால்; காட்டு மரத்தால் கட்டிய பாடையில் தூக்கிச் செல்லப்படுகிறான்; இவனுக்கு முன்னால் போனவர்கள் எல்லாம் எழுதபடி பின்னால் போகின்றார்கள். இவனுடைய இந்தப் பயணத்தின் உண்மையான மெய்ப்பயணம் ஆருயிர், ஆவி, ஆன்மா என்ற மூன்றும் மேற்கொள்ளும் பயணம்தான். அப்பயணம் வெவ்வேறு திசைகளில், வெவ்வேறு வகையான வேறுபட்ட முடிவுகளைப் பெறச் செல்லும் பயணங்களாகிடும். அம்மூன்றுக்கும் தக்க மெய்ஞ்ஞான குருவின் வழிபெற்ற சத்தி சித்திகளே வழித் துணையாக வழிகாட்டியாக அமையும். குருவில்லாதவனின் இப்பயணங்கள் குருடனின் பயணங்களாகவே ஆகிடும்.

சிவிகை ஏறிச் செல்லும் பெருந்தலைவனுக்கும் பிறர் தூக்கிச் செல்ல இறுதிப் பயணம் செல்ல நேரிடும் அப்பயணம் நல்ல பயணமாக அமைந்திடச் சற்குருவை அடைந்திடல் வேண்டும். குருவழி நிற்பவனே, இறப்பின் அச்ச கூச்ச இச்சை மாச்சரிய ஆச்சரியங்களை வெல்ல முடியும். இதனை எண்ணிப் பார்த்துக் குருவைக் குரங்குக் குட்டி தனது தாய்க் குரங்கை இறுகப் பற்றிக் கொள்வது போல் விடாமல் அடியொற்றிப் பற்றி வாழ்ந்திடுக!

குருவே இறந்துபட்ட மாணாக்கனின் உடல் எரிந்து சாம்பலாகி நீரில் கரைக்கப்பட்ட பிறகும் அல்லது புதைக்கப்பட்ட ஐம்பூத உடல் மக்கி மண்ணோடு மண்ணாகி விட்ட பிறகும் அவனைப் பற்றிக் கவலைப் பட்டு அவனுடைய ஆருயிர், ஆவி, ஆன்மா,.......... மூன்றும் துன்புறாமல் இன்புறுவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து உரிய தோதுக்களையும், ஏதுக்களையும் செய்திடுவர். ஆனால், மனிதன் வாழும்போது அவனது உடலுக்குச் சொந்தம் பாராட்டும் பெற்றோர், உடன் பிறந்தார், மனைவி மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், தோழர்கள்......... முதலிய அனைவருமே அவன், இறந்தவுடனேயே அவனைப் "பிணம்" என்று அழைத்து அஞ்சி விரைந்து புதைத்தோ எரித்தோ ஈமச் சடங்குகளை முடித்து நீராடி அவனை மறக்க முயன்றிடுவர்.

[தொடரும்]

இப் பேரழிவுப் போருக்காகவே மாயக் கண்ணன் வாழ் நாள் முழுவதும் மங்கையர்களோடு மகிழ்ச்சி மழையில் திளைத்தது போல் நடித்தான் அவனுடைய கொடூரமான கடினச் சித்தம் மிகமிகச் சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் செயல்பட்டதால் தான் ஏகலைவனைத் துரோணருக்குத் துணையாக முடியாமலும்; விதுரனைத் துரியோதனனுக்குத்துணையாகமுடியாமலும் ,கன்னனுக்கு கவசகுண்டலங்களும், அத்திரங்களும் பயன்படாமலும், பஞ்சபாண்டவர்களுக்கு அவர்களின் அனைத்து வாரிசுகளும் பயன்படாமலும், காந்தாரியின் கற்பின் வலிமை துரியோதனனைக் காப்பாற்ற முடியாமலும் ........போகுமாறு செய்திட்டான், இவையெல்லாம் மிகமிகக் கூரிய, சீரிய, அரிய, பெரிய, நேரிய நெடுங்காலத் திட்டங்களேயாகும், எனவே கண்ணனே பாரதப்போரில் அனைத்துமாக இருந்தான் என்பதே உண்மை, அவன் அழுகையிலும் சிரிப்பிலும் தோல்வியிலும், வெற்றியிலும், 'இறப்பிலும் பிறப்பிலும்', 'ஆரம்பத்திலும் முடிவிலும்' .....நீக்கமற நிறைந்திருந்தான் இதுவே சந்திரகுலத்தாரின் முழுமுதற் பரம்பொருள் தத்துவத்திற்கும் சிறந்த சான்றுகும் ஊன்றுகும், இருப்பினும் இம்மாயக் கண்ணனால் பேரழிவே நிகழ்ந்தது என்பதால்தான் இவனை பதினென் சித்தர் பீடத்திற்கு உரியவனாக ஆக்க முடியவில்லை. மேலும் இவன பொய்யே சொல்லாத தருமரையும் பொய் சொல்லச் செய்தான் என்பதால் இவன் நவநாத சித்தர் என்ற நிலையிலேயே வைத்திருக்க அஞ்சிய கருக்கள் குருக்கள், தருக்கள் திருக்கள், தாத்தாக்கள், ஆத்தாக்கள், உலக அருளாளர்கள் முதலியோர் அனைவரும் ஒன்று கூடி இவரது பிணம்கூட நன்றாக எரியாமல் அரை வேக்காட்டுக் கறிக்கட்டையாகப் புதையுண்டு என்றென்றும் இம்மண்ணுலகிலேயே இவனது ஆவி, ஆண்மா உயிர் மூன்றும் சுற்றி உழலும்படிச் செய்தார்கள்..... இதற்குமேல் இம்மாயக் கண்ணனைப்பற்றி இயம்புவது மருத்துவனாக இருந்தாலும் அறுத்துப்பார்க்கும் எல்லையைக்கடப்பதாகும் -தேவ மருத்துவன் தன்வந்திரி

---

# வேண்டுகோள்!

இயக்கத்தின் அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், விருப்பாளர்கள், நம்பிக்கையாளர்கள், பற்றுளர்கள், ஆன்மீக உணர்வு கொண்டோர், ஆத்திகப் பண்புடையோர்..............யாராயினும் வரும் பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிட வேண்டுகின்றோம்.

நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி உறுப்பினர்...........ஆக எந்தப் பிரிவிற்கு வேண்டுமானால் நிற்க வேண்டுகின்றோம் இதன் மூலம் நமது இயக்கம் மக்களிடையே செல்வாக்குப் பெற வழிகோலும் அனைவரும் தயங்காது, மயங்காது, கலங்காது தேர்தலில் நிற்க வேண்டுகின்றோம். வேட்பாளர்களுக்கு 'ஞாலகுரு சித்தர் கருவூராரின்' அருளும் அவரின் தொண்டர்களின் அனைத்து வகை ஆதரவும் உறுதுணையும் கிடைக்கும்! எனவே மக்கள் ஏற்றமிகு வாழ்வடைய நமது இயக்கத்தின் சார்பில் அனைவரும் தேர்தலில் பங்கு கொள்வோம்!

—இந்து மறுமலர்ச்சி இயக்கம்

# குருபாரம்பரியம் தரும் யக்ஞ வல்லியர் வரலாறு

**(சித்தர் காகபுசுண்டர் ம பழநிச்சாமி பிள்ளை)**

தற்போது பிறமண்ணினரான பிருமணர்களின் சமய மாத இதழ்களில் 'யாக்ஞவல்லியர்' என்று குறிப்பிட்டு இராமயணக் காலத்தில் வாழ்ந்த தமிழருளாளனைப்பற்றி தவறனக் கருத்துக்கள் வெளியிட்டு வருகின்றனர் எனவே அவரைப் பற்றிய உண்மையை அனைவரும் அறியும் பொருட்டு இதனை தொடர்ந்து வெளியிடுகின்றேம்.

இன்றுள்ள தமிழ் எழுத்துக்களால் என்றென்றுமுள்ள தமிழர்களுக்கு புரியும் வண்ணம் எழுதத்துவங்கியுள்ளோம் யாம். இதனுல் உருவாகும் எண்ணப் புரட்சி கருத்துப்புரட்சி, சிந்தனைப்புரட்சி.........முதலியவைகள் தான் தமிழர்களை ஆரிய மாயைகளிலிருந்து காப்பாற்ற வேண்டும்! அதாவது ஒவ்வொரு தமிழனுக்கும் 'தான் ஒரு தமிழன்' என்பது புரிய வேண்டும். தன்னுடைய பண்பாடும், நாகரீகமும் வரலாறும் இந்து மத அடிப்படையில் விளங்கிடல் வேண்டும் அப்பொழுதுதான் அவன் ஓர் இந்துவாக உணர்வாலும் சிந்தையாலும், செயலாலும் முழுக்க முழுக்க தமிழ் மொழிப்பற்றும், தமிழினப்பற்றும், தமிழ்நாடடுப்பற்றும ஊற்றெடுக்கப்பெற்ற ஒரு தமிழனுக உண்மையான இந்துவாக வாழந்திடுவான்.

இப்பொழுது யாம் குறிப்பிடும் யக்ஞவல்லியின் வரலாறு பற்றிய குறிப்பு இராமாயணத்தை விட மிகமிக அவசியமாக அவசரமாக அனைத்துத தமிழா களாலும் புரிந்து உணர்ந்து தெளிந்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றுகும்

வல்லி = வல்லவன் சிறந்தவன் பேராற்றல் மிக்கவன் என்று பல பொருள்களை குறிக்கும். பதினெண்சித்தர்கள் சூரிய குலத்தில் (1) ஓமவல்லி (2) ஏகவல்லி (3) யாகவல்லி (4)யக்ஞவல்லி (5) வேள்வி வல்லி (6)தவவல்லி (7)ஞானவல்லி (8) மாந்தரீகவல்லி என்று எட்டு வகையான வல்லிகளை படைத்துப்பூசாவிதிகளை வகுத்துள்ளார்கள்.

சந்திர குலத்தில் 1 நேமவல்லி 2 நியமவல்லி 3 நிடதவல்லி 4 நிட்டை வல்லி 5 சுருதி வல்லி 6 ஆரண வல்லி 7 ஆகம வல்லி 8 மீமாமசை வல்லி 9 காந்தரீக வல்லி 10 ஏந்தரீகவல்லிஎன்று பத்து வகையான வல்லிகளைப் படைத்துவழிபாட்டு நிலைய உயிர்ப்பு விதிகளை வகுத்துள்ளார்கள்.

வட ஆரியர்கள் இந்த வல்லியர்களைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் மறைக்கவும் திரிக்கவும் திருத்தி மாற்றி இருட்டடிப்புச் செய்யவும் மிக நுட்பமான சூழ்ச்சி திட்டக்கருத்தை யக்ஞவல்லியின் பெயரிலேயே திரிபை உண்டாக்கி சூழ்ச்சி வலை பிண்ணிவிட்டார்கள்.

யக்ஞவல்லி--> யாக்ஞவல்கி என்று திருத்தி அமைத்திட்டார்கள். இத்துடன் இவரை '' நான் வேத வல்லார '' என்று கூற ஆரம்பித்து விட்டார்கள். ஆனுல் மிகத் தெளிவாக சித்தர்களின் நூல்களில்'' நான்மறை முற்றி யக்ஞவல்லி ''என்று குறிக்கின்றுர்கள்.

கங்கைக் கரையில் இருந்திட்ட நாடுகளில் குரு பாஞ்சால நாட்டைச் சேர்ந்த காட்டில் சூரிய குலத்தவர்கள் ஐந்தி வேட்டல் முத்தீ ஓம்பல் என்பவற்றில் ஈடுபட்டு கூட்டம் கூட்டமாக முனிவர்களாக இருடிகளாக வாழ்ந்தார்கள். இவர்களுக்கிடையில் தலைமை வாய்ந்தவராக விளங்கிய 'பிறம்மராக்கதர் தமதுதுணைவியான அணங்குடன் [அணங்கை, சுணங்கை என்று வழக்கு மாறுபாடு உண்டு] வாழ்ந்து வந்தார் இவர் தமது தவவலிமைக்கும் ஞானத்திற்கும் ஏற்ற குழந்தை பிறக்க வேண்டும் என்பதற்காக சூரியனையும் சூரியகுல காகபுசுண்டரையும் திருமாலையும் 48 மாதங்கள் தொடர்ந்து வேண்டி யோக போக முறைப்படி ஆண் மகவை பிறப்பித்தார். அந்த மகவே சூரியனர் என்று கங்கைகரைவாசிகளால் சீராட்டி பாராட்டி வளர்க்கப்பட்டது

# வணக்கவுரை

இன்றைய தினம் பொதுவுடமைக் கட்சியின் கொள்கையை உள்ளீடாகக் கொண்டு பல்வேறு பெயர்களில் பல்வேறு வகையில் சமுதாயத்தில் பல அமைப்புகள் தங்களின் பணிகளைச் செய்துவருகின்றன: தவறுகளும், தவறுனப் போக்குகளும் பொதுவாக இவ்வமைப்புகளில்காணப்பட்டாலும்; அவர்களைவிடத் தீவிரமானதும் திராவிடர் கழகத்தினரைவிடப் பன்மடங்கு தெளிவானதுமான கொள்கையுடைய இந்து மறுமலர்ச்சி இயக்கம் ஏன் இன்னும் ஆரவாரத்துடன் அன்ருடப் பிறச்சினைகளில் தலையிடாமல் இருக்கின்றது ? என்ற கேள்வி பொதுவாக எழக்கூடும் !

ஆனல் இந்த சின்னச் சின்ன(அ)தெரு.கிராமப் பிறச்சினைகளுக்காகப் போராடவும், வாதாடவும் பல இயக்கங்கள் பாடுபட்டு வருகின்றன. இதை மறுக்கவோ மறைக்கவோ நாம் விரும்பவில்லை. ஆனல் இப்பிறச்சினைகளுக்கெல்லாம் உள்ளீடாக இருந்து வரும் அடிப்படைத் தவறுகளை தூர்ந்துப்போயிருக்கும் கால்கோள்களை செப்பனிடுவதுதான் நமது பணி. அதனைச் செப்பனிடுவதற்கோ அதைப் பற்றிச் சிந்திப்பதற்கோ யாரும் எந்த இயக்கமும் இன்று நாட்டில் தயாராயில்லை

தொடர்ந்து மக்கள் மதத்தாலும். மொழிவெறியாலும், கலையாலும், தொழிலாலும்... சுரண்டப்படுவதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. இதிலே மூழ்கி தத்தளித்துக் கொண்டிருக்கும் மக்களை விடுவிப்பது என்பது சாதாரணக் காரியமன்று இன்னும் 25 ஆண்டுகள் திரைப்படத்தார்கள் தான் இந்த நாட்டை ஆளுவர் என்று தைரியமாகக் கூறுகின்ற கால கட்டத்தில் வாழ்கின்ருேம் என்னும் போது இ ம. இ, முழுமையான சமுதாய மாற்றத்திற்காக கருத்துப் புரட்சியை உருவாக்குவதற்காக எவ்வளவு தூரம் செயல்படுகின்றது என்பதை ஊன்றிப் பார்த்தால் நன்கு புரியும்.

சி. கவிக்குமார்

தலைமைப் பொறுப்பாளர்

---

## கடவுள் எங்கே...

கடவுளென்ருல் என்னவென்று
  கலியுகத்தில் கேட்கும் ஞானிகள் தன்
திடமனதை உணர்ந்து கேட்டால்
  திராவிடர்களின் பதில் தெரியும்
மடமைகளை கடமையாக்கி
  மதியிழந்து பேசும் கூட்டமே
உடமைகளின் தேவைகள் போல
  உடமையானது கடவுள்களே !
ஆறறிவை பேரறிவாக்கிய
  அருட்விஞ்ஞானிகளே கடவுள்கள் !
ஏராளமான பேருண்மைகளின்
  எளிமை சோதிகளே கடவுள்கள் !
தாராளமான இயற்கை வடிவத்தின்
  தவப்புதலவர்களே கடவுள்கள்

வேருகவோடி கனிதருகின்ற
  வெற்றி அருவர்களே கடவுள்கள் !
இளமைகளிலும் பழமைகளிலும்
  இணைந்த வடிவமே கடவுள்கள்
வளமைமிகுந்த புலமைகளை
  வழங்கியவர்களே கடவுள்கள்
குளங்கள் மிகு சோலை வனங்களில்
  குடியிருப்பவர்களே கடவள்கள்
நலங்கள் மிகுபழங் கனிவகரி
  நல்குபவர்களே கடவுள்கள் !

கவிமேகம் இல. கு கணேசன்
வேம்படிதாளம் (சேலம்)

---

K V S பிரிண்டர்ஸ், தோடி பொன்னேரி.